

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936



www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

♦ பதிப்பு : நாகர்கோவில் ♦ 27.10.2026 ♦ மலர் 04 ♦இதழ்: 299 ♦ செவ்வாய்


♦Edition : Nagercoil ♦27.10.2026 ♦ Vol : 04 ♦Issue : 299 ♦Page : 4 ♦Rs. 5/-

ஒடிசாவில் ஆர்பிஐ தரவு மையத்தை திறந்து வைத்தார் பிரதமர் மோடி

புவனேஸ்வர்: ஒடிசா தலைநகர்புவனேஸ்வரில் அமைக்கப்பட்டுள்ள ரிசர்வ் வங்கியின் (ஆர் பிஐ) தரவு மையம் மற்றும் சைபர் பாதுகாப்பு பயிற்சி மையத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் ரிசர்வ் வங்கியின் தலைமை அலுவலகம் செயல்படுகிறது. இயற்கை பேரிடர் உள்ளிட்ட காரணங்களால் மும்பை அலுவலகத்துக்கு சேதம் ஏற்பட்டால் நாடு முழுவதும் வங்கிச் சேவைகள் பாதிக்கப்படக் கூடும். எனவே மாற்று ஏற்பாடாக ஒடிசா தலைநகர்புவனேஸ்வரில் 18.55 ஏக்கர் பரப்பில், ரூ.169 கோடி செலவில் ஆர் பிஐ தரவு மையம், சைபர் பாதுகாப்பு பயிற்சி மையம் அமைக்கப்பட்டு உள்ளது.

மும்பைதலைமை அலுவலகத்துக்கு பாதிப்பு ஏற்பட்டால், புவனேஸ்வர் மையம் மூலம் ரிசர்வ் வங்கி தொடர்ந்து செயல்படும். வங்கிச் சேவைகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இந்த புதிய



மையத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: மக்கள் நலனை முன்னிறுத்தி மத்திய அரசு சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக கிராமங்கள், சிறிய நகரங்களின் வளர்ச்சிக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

ஏழை குடும்பங்கள் கண்ணியத்துடன் வாழவேண்டும் என்பதிலும் மத்திய அரசின் திட்டங்கள் கடைநிலை மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதிலும் மிகவும் உறுதியாக உள்ளோம். கடந்த 2014ம் ஆண்டுக்கு முன்பாக நாட்டின் வங்கிச் சேவை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. காங்கிரஸ் கட்சியுடன் தொடர்புடையவர்களுக்கு மட்டுமே வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டன. அவர்கள் ஆயிரக்கணக்கான கோடிகளில் கடன்களை பெற்றனர்.

அதே நேரம் ஏழைகள், நடுத்தரவர்க்க மக்கள் வங்கிக்கணக்குகளை தொடங்கக்கூட உத்தரவாதம் கோரப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பெறப்பட்ட வங்கிக் கடன்கள் முறையாக திருப்பிச் செலுத்தப்படாததால் ஒட்டுமொத்த வங்கி நிர்வாகமும் பாதிக்கப்பட்டது. நவீன கால போர்களில் சைபர் தாக்குதல்கள் மிகப்பெரிய சவாலாக உருவெடுத்திருக்கிறது.

சைபர் கிரிமினல்கள், சைபர் தீவிரவாதிகளிடம் இருந்து நாட்டின் வங்கி நிர்வாகத்தைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. ஒடிசா தலைநகர்புவனேஸ்வரில் அமைக்கப்பட்டிருக்கும் ரிசர்வ் வங்கியின் புதிய தரவு மையம் நாட்டின் வங்கி நிர்வாகப் பாதுகாப்பை வலுப்படுத்தும். இவ்வாறு அவர் பேசினார்

குமரியில் 4 மாத கைக்குழந்தை, 40 நாள் பச்சிளம் குழந்தை; அடுத்தடுத்து உயிரிழப்பு

போலீசார் விசாரணை

நாகர்கோவில், அக். 27

குமரி மாவட்டத்தில் 4 மாத கைக்குழந்தை மற்றும் பிறந்து 40 நாட்களான பச்சிளம் குழந்தை அடுத்தடுத்து உயிரிழந்துள்ளது. மாவட்டத்தில் பரபரப்பு ஏற்படுத்தியுள்ள இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

கொட்டாரம் அருகே உள்ள முத்துலட்சுமிபுரத்தை சேர்ந்தவர்கள் சங்கர் நீலா ராணி தம்பதியினர் இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் இவர்களது நான்கு மாத கைக்குழந்தையான ஷர்வின் என்ற குழந்தை நீண்ட நேரம் எந்த அசையும் இன்றி கிடந்துள்ளது. இதை அடுத்து குழந்தை உடனடியாக அங்குள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொண்டு சென்றனர். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் நாகர்கோவிலில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கிருந்து மேல் சிகிட்சைக்காக குமாரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட குழந்தை ஷர்வின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது. இது குறித்து தென்தாமரைக்குளம் போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

இது போன்று திருவட்டாறு பகுதியை சேர்ந்த ஜெகன் ஜெபராஜ் (36). இவர் பொக்லைன் டிரைவர். இவரது மனைவி ஆட்லின் ஷைனி. இவர்களுக்கு பிறந்து 40 நாட்களான பச்சிளம் பெண் குழந்தை இருந்தது. நேற்று காலையில் எழுந்து பார்த்தபோது குழந்தை பேச்சு மூச்சின்றி கிடந்ததோடு மூக்கில் ரத்தம் வடிந்திருந்தது. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த ஜெகன் ஜெபராஜ் உடனடியாக தக்கலை அரசு மருத்துவமனைகொண்டு சென்றனர் அங்கு டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். குழந்தையின் உடல் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்த புகாரின் பேரில் திருவட்டாறு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கன்னியாகுமரியில் கல்நடை டாக்டர் தற்கொலை

கன்னியாகுமரி, அக். 27

கன்னியாகுமரி அருகே மாதவபுரம் குமரி காரடன் பகுதியை சேர்ந்தவர் அன்பு செல்லையன் (58) இவருக்கு திருமணம் ஆகி மனைவி உள்ளார். இந்த நிலையில் அன்பு செல்லையன் கால்நடை டாக்டருக்கு படித்திருந்தாலும் அவர் மருத்துவப் பணி செய்யவில்லை என கூறப்படுகிறது. காரணம் அவர் தீராத நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளதாகவும் தெரிகிறது. இதற்கிடையே கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கருத்து வேறுபாடு காரணமாக அவரது மனைவி பிரிந்து சென்று விட்டார். இதனால் அன்பு செல்லையன் அதே பகுதியில் உள்ள தனது தங்கை மலர் விழி என்பவரது வீட்டில் வசித்து வந்தார்.

சம்பவ தினம் மலர்விழி வீட்டில் உள்ளவர்களுடன் நாகர்கோவிலுக்கு பொருட்கள் வாங்க சென்று விட்டார். அப்போது வீட்டில் தனியாக இருந்த அன்பு செல்லையன் அறையில் உள்ள கொக்கியியில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். பின்னர் வீட்டுக்கு வந்த மலர் விழி அண்ணன் தூக்கு போட்டு தொங்குவதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக அவரை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள், டாக்டர் அன்பு செல்லையன் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். இது குறித்து கன்னியாகுமரி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்து, மேலும் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

மாமன்னர் மருது பாண்டியர்களின் 225வது குருபூஜை விழா

2,700க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர்

திருப்பத்தூர் மற்றும் காளையார்கோவில் பகுதிகளில் நடை பெறவுள்ள மாமன்னர் மருது பாண்டியர்களின் 225 வது குருபூஜை விழாவை முன்னிட்டு, பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சிவகங்கை மாவட்ட காவல் துறை சார்பில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விழா முன்னேற்பாடுகள் தொடர்பாக, 07.10.2026 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் பல்வேறு துறை உயர் அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட ரங்கில் நடைபெற்றது. விழாவை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது டன், வருவாய்த்துறை, காவல் துறை, தீயணைப்புத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் சார்பிலும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்ட 2,700க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இதில் ஒரு காவல் துணைத் தலைவர், 5 மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், 7 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 30க்கும் மேற்பட்ட துணைக் காவல் கண்காணிப் பாளர்கள் மற்றும் 80க்கும் மேற்பட்ட காவல் ஆய்வாளர்கள் அடங்குவார்கள், கலவரக் கட்டுப்பாட்டு வாகனங்கள், வருண் மற்றும் வஜ்ரா வாகனங்கள் முக்கிய இடங்களில் நிலைநிறுத்தப்பட உள்ளன. மேலும், 25க்கும் மேற்பட்ட நான்கு சக்கர ரோந்து வாகனங்கள், 45க்கும் மேற்பட்ட இருசக்கர ரோந்து வாகனங்கள் மற்றும் 10க்கும் மேற்பட்ட இடங்களில் விரைவு அதிரடிப்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

விழாப் பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் சிசிடிவி கேமராக்கள் மூலம் காவல் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. மாவட்டம் முழுவதும் 10க்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, வெளி மாவட்ட வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளன. மேலும், முக்கியமான 5 இடங்களில் இருசக்கரவாகனச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. பேருந்துகள் மறவமங்கலம் பகுதியில் பக்தர்களை இறக்கிவிட்டு, மாந்தளி வாகன நிறுத்துமிடத்திற்குச் செல்ல வேண்டும். கார் உள்ளிட்ட நான்கு சக்கர வாகனங்கள் தெப்பக்குளம் அருகே ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்தப்பட வேண்டும். விழாப் பகுதிக்குள் இருசக்கர வாகனங்களில் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரையிலிருந்து ராமநாதபுரம், தொண்டி மற்றும் திருவாடானை செல்லும் வாகனங்கள், சிவகங்கை முத்து காமாட்சி அம்மன் சோதனைச் சாவடி அருகிலுள்ள மதுரை புறவழிச்சாலை – திருப்பத்தூர் சாலை – ஒக்கூர் – காளையார் மங்கலம் விளக்கு – நாட்டரசன்கோட்டை – கவுரிப்பட்டி – கண்டனப்பட்டி – கல்லல் வெற்றிகரிசாலை – காளையார்கோவில் – காலாகம்மாய் விளக்கு – ஆண்டிச்சூரணி வழியாகத் தொண்டி சாலையை அடைந்து செல்ல வேண்டும். ராமநாதபுரம் பகுதியிலிருந்து சிவகங்கை மற்றும் மதுரை நோக்கி வரும் வாகனங்கள், ஆண்டிச்சூரணி சந்திப்பில் வலதுபுறம் திரும்பி, ஊத்தங்கண்மாய் சாலை வழியாக வெற்றியூர் நான்கு ரோடு சந்திப்பை அடைந்து, அங்கிருந்து இடதுபுறம் திரும்பி நடராஜபுரம் விளக்கு வழியாகச் சென்று, மீண்டும் இடதுபுறம் திரும்பி கண்டனப்பட்டி – கவுரிப்பட்டி – இலங்கைத் தமிழர் குடியிருப்பு வழியாகத் திருப்பத்தூர் – மானாமதுரை புறவழிச்சாலையை அடைந்து செல்ல வேண்டும். மேலும், விழா நாளன்று காலை 6.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை சிவகங்கை பேருந்து நிலையப் பகுதியில் பொது மக்களின் வாகனப் போக்குவரத்திற்குத் தடை விதிக்கப்படுகிறது பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் காவல் துறையினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, ஒதுக்கப்பட்ட வாகன நிறுத்துமிடங்களைப் பயன்படுத்தி, அறிவிக்கப்பட்டுள்ள போக்குவரத்து மாற்றங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாமன்னர் மருது பாண்டியர்களின் 225 வது குருபூஜை விழாவை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் சமூக நல்லிணக்கத்துடனும் நடத்துவதற்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் சிவகங்கை மாவட்ட காவல்துறை அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து விடுக்கப்பட்ட செய்தி குறிப்பு தெரிவிக்கிறது

தூத்துக்குடியில் ரூ.3.53 கோடியில் புதிய திட்டப்பணிகள் திறப்பு: வடகிழக்கு பருவமழை வெள்ளத் தடுப்புப் பணிகளை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத் ஆய்வு!



தூத்துக்குடியில் ரூ.3.53 கோடியில் புதிய திட்டப்பணிகளை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத் திறந்து வைத்தார்: தூத்துக்குடியில் பல்வேறு திட்டப்பணிகளை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் திறந்து வைத்து, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பாக வெள்ளத் தடுப்பு பணிகளை பார்வையிட்டார் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இன்று பல்வேறு திட்டப்பணிகளை திறந்து வைத்து, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பாக வெள்ளத் தடுப்பு பணிகளை தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் சி.ப்ரியங்கா, முன்னிலையில் பார்வையிட்டார். தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தங்கம்மாள்புரம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாநில நிதியின் கீழ் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பக்கவாட்டு சுவர் மற்றும் பாலப் பணிகளையும், கந்தன் காலனி மற்றும் குருஸ்புரம் பகுதியில் மாநில பேரிடர் தணிக்கை நிதியின் கீழ் ரூ.53.70 கோடி மதிப்பீட்டில் பக்கிள் ஓடை அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதையும், முத்தையாபுரம் நியாயவிலைக் கடையின் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளை பார்வையிட்டு வருகிறோம். அதன் அடிப்படையில் பக்கிள் ஓடை, எப்.சி.ஐ குடோன் போன்ற பகுதிகளை பார்வையிட்டு வருகிறோம். இப்பணிகளைசீரமைக்கும் விதமாக மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சியின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய அனைத்து பணிகளையும் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறோம் என தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடியில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம்

தூத்துக்குடியில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் விஷ மகாஜன் தலைமையில் நடைபெற்றது தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று மாவட்ட ஆட்சியர் விஷ மகாஜன், தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைத் தீர்க்கும் நாள் கூட்டத்தில் மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, மனுக்களின்மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல் உத்தரவு, வரன்முறைப்படுத்தி பட்டா, மகளிர் உரிமைத் தொகை, தொழில் கடனுதவி, முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை மற்றும் இதர பல்வேறு மனுக்கள் என 390 மனுக்களும், மூத்த குடிமக்களிடமிருந்தும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 17 மனுக்களும், மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து அவர்களிடமிருந்து 17 மனுக்கள் என மொத்தம் 424 மனுக்களை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மூ.குருச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் ச.பா.தி பிர்தௌஸ் பாத்திமா, பயிற்சி உதவி ஆட்சியர் பாட்டீல் கிருஷ்ணா பபுருவான், உதவி ஊராட்சிகள் உதவி இயக்குநர் சாந்தி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் காமாட்சி, பயிற்சி துணை ஆட்சியர் மனோபார்கவி மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், சிங்காரப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 12 வயது சிறுவனும், காவேரிப்பட்டணம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுவனும், பெற்றோருடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளனர். இதுகுறித்து பெற்றோர்கள் அளித்த புகார்களின் பேரில், சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா உத்தரவின்பேரில், காவல்துறையினர் உடனடியாகத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, சிங்காரப்பேட்டையைச் சேர்ந்த சிறுவனை 24 மணி நேரத்திற்குள்ளும், காவேரிப்பட்டணம் பகுதியைச் சேர்ந்த சிறுவனை 4 மணி நேரத்திற்குள்ளும் பத்திரமாக மீட்டு, அவரவர் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர். இரு சிறுவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் மாவட்ட காவல் அலுவலகத்திற்கு அழைத்து நேரில் கலந்துரையாடி அறிவுரைகள் வழங்கினார். தொடர்ந்து, சிறுவர்களைப் பெற்றோருடன் நலமுடன் அனுப்பி வைத்தார். குழந்தைகளுடன் பெற்றோர்கள் அன்புடனும் புரிதலுடனும் கலந்துரையாடி, அவர்களின் உணர்வுகளையும் தேவைகளையும் அறிந்து ஆதரவாக இருக்குமாறு கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை சார்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா கேட்டுக்கொண்டார்.

ராயல் கேர் மருத்துவமனையில் புதிய நவீன மகப்பேறு மையம் தொடக்கம்

சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு

கோவை அக்:27

கோவை ராயல் கேர் மருத்துவமனையில், தாய்மார்கள் பாதுகாப்பான, வசதியான மற்றும் தனிப்பட்ட பராமரிப்புடன் குழந்தை பெற்றெடுக்கும் அனுபவத்தை வழங்கும் வகையில், நவீன மகப்பேறு மையமான ராயல் கிரேடில் பிரசவ மையம் தொடங்கப் பட்டது.

இதற்கான தொடக்க விழாவுக்கு ராயல் கேர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் மருத்துவர் மாதேஸ்வரன் தலைமை வகித்தார்.

இதில் கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கனிமொழி சந்தோஷ், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ராயல் கிரேடில் மகப்பேறு பிரிவை திறந்து வைத்தார். விழாவில் கவுரவ அழைப்பாளராக சூலூர் சட்டமன்ற



தொகுதி உறுப்பினர் சுகுமார் பங்கேற்றார்.

தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பிரசவ மையத்தில், நவீன மருத்துவ வசதிகளுடன் கூடிய பிரத்யேகப் பிரசவ அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மருத்துவத் தகுதி மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு உட்பட்டு, பிரசவ வலியின் போது நீரில் இருப்பது அல்லது நீரில் குழந்தை பெற்றெடுப்பது போன்ற வசதிகளும் வழங்கப்படுவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் மகப்பேறு மருத்துவ நிபுணர்கள் கல்யாணகுமாரி, கலைவாணி, பிரேமலதா, வினோதினி, மற்றும் ராயல் கேர் மருத்துவமனையின் மருத்துவ இயக்குனர் டாக்டர் பரந்தாமன் சேதுபதி, முதன்மை செயல் அதிகாரி. மணி செந்தில்குமார், மார்க்கெட்டிங் பிரிவு சீனியர் பொது மேலாளர் வெங்கடேசன் உட்பட மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துதுறை சார்பில் நன்னகரத்தில் உள்ள துணை சுகாரதார நிலையத்தில் வைட்டமின் A திரவம் வழங்கும் முகாமினை மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து குழந்தைகளுக்கு வைட்டமின் A திரவத்தை வழங்கினார்.

திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் பொது செயலாளர் நியமனம்!

நிர்வாகிகள் வாழ்த்து



திருப்பூர், அக்.27தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் உத்தரவின் பேரில் திருப்பூர் மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் கோபால்சாமி, பரிந்துரையின் அடிப்படையில் மீண்டும் திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் பொது செயலாராக எஸ். கோவிந்தசாமி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதைத்தொடர்ந்து அவருக்கு மாநகர் மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், முக்கிய பிரமுகர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்...

தக்கலை அருகே சிறுமி வன்புணர்வு : 2 வாலிபர்களுக்கு ஆயுள் மற்றும் 27 ஆண்டுகள் சிறை தண்டனை

போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு



நாகர்கோவில், அக்.27

தக்கலை அருகேயுள்ள கொற்றிக்கோடு போலீஸ் சரகத்துக்குட்பட்ட ஒரு பள்ளி மாணவிகள் 15 பேர் கடந்த 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருச்சியில் ஒரு விளையாட்டு போட்டிக்கு சென்றனர். அங்கு விளையாட்டு முடிந்து சம்பவ தினம் தக்கலைக்கு வந்தனர். அப்போது அதில் 17 வயது மாணவி ஒருவர் தக்கலை பஸ் நிலைய பகுதியில் தனது தந்தையை காத்து நின்றார். அப்போது சிறுமி மிக்கு திடீர் என இயற்கை உபாதை ஏற்பட்டு அவதிய டைந்துள்ளார். அப்போது அங்கு வந்த பைசல்கான் என்பவர் தனது வீட்டில் இயற்கை உபாதை கழிக்க உதவுவதாக கூறி மாணவியை அவரது வீட்டுக்கு அழைத்து சென்று பாலியல் வன்புணர்வு செய்துள்ளார். பின்னர் அவர் நண்பர் மணக்காவிளை பகுதியை சேர்ந்த ஜாய்சன் என்பவரும் மாணவியை சீரழித்துள்ளார். இது குறித்த புகாரின் பேரில் கொற்றிக்கோடு போலீசார் வழக்கு பதிவு செய்து, பின்னர் மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்சோ உள்ளிட்டபல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டு குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்நிலையில் நீதிபதி சுந்தரையா இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளி பிரதீஷ் (27) என்பவருக்கு 27 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 57 ஆயிரம் ரூபாய் அபராதமும், பைசல்கான் (37) என்பவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் 54 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணையில் சிறப்பாகச் செயல்பட்டு, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதில் முக்கியப் பங்காற்றிய இவ் வழக்கின் நீதிமன்ற தலைமைகாவலர் மெர்சி பாய், வழக்கின் நீதிமன்ற விசாரணையை முறையாகக் கண்காணித்த மார்த்தாண்டம் உட்கோட்டதுணைக்காவல் கண்காணிப்பாளர் மற்றும் மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர்கள் உமா மற்றும் பாத்திமா பர்வீன் ஆகியோரை கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அன்சுல் நாகர் வெகுவாகப் பாராட்டினார்.

தருமபுரியில் உயர் கல்வி பயிலும் 154 மாணவ,மாணவிகளுக்கு 6 கோடி கல்வி கடன் ஆட்சியர் சரவணன் தகவல்



தருமபுரி அக்.27

தருமபுரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் சிறப்பு கல்விக்கடன் வழங்கும் முகாம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்தார். மேலும் தகுதியின் அடிப்படையில் தேர்வான மாணவ, மாணவிகளுக்கு கல்வி கடன் வழங்குவதற்கான ஆணைகளை வழங்கினார். இந்த முகாமில் ஆட்சியர் கூறியதாவது. தமிழ்நாடு அரசு அனைத்து மாணவ, மாணவிகளும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக தருமபுரி மாவட்டத்தில் உயர் கல்வி பயிலும் ஏழை எளிய மாணவ, மாணவிகள் தங்களுக்கு விருப்பமான உயர் கல்வி பயில வழிவகை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பு கல்விக்கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவ, மாணவிகள் பெருளாதார சூழ்நிலையால் உயர்கல்வி பயில்வதில் தடைகள் ஏற்படாமல் தங்களது கல்வியை தொடர்ந்து முடித்து வேலை வாய்ப்புகளை பெறுவதற்கு கல்வி கடன் முக்கிய பங்காற்றுகிறது. எனவே மாணவ, மாணவிகள் சரியான வழிகாட்டுதல் பெற்று பயன் பெறுமாறு ஆட்சியர் கூறினார். இந்த நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கவிதா, உதவி ஆட்சியர்கள் ஜெய்சங்கர், செம்மலை, இந்தியன் வங்கி மண்டல துணை மேலாளர் சௌந்தர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் தீபன் மற்றும் வங்கியாளர்கள், அரசு அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

குமரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 2027ஆம் ஆண்டுக்கான காலண்டர்;கலெக்டர் கோரிக்கை

நாகர்கோவில், அக்.27

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஒரு புதுமையான முயற்சியாக 2027ஆம் ஆண்டுக்கான அதிகாரப் பூர்வ காலண்டர் (நாட்குறிப்பு) வெளியிடப்பட வுள்ளது. இந்தச் சிறப்பு காலண்டரை அலங்கரிக்கும் வகையில் புகைப்படக் கலைஞர்களிடமிருந்து அரியவகை தத்ரூபமான புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. மாவட்டத்தின் இயற்கை வளம், கலைப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரச் சிறப்புகளை உலகறியச் செய்யவும் உள்ளூர் புகைப்படக் கலைஞர்களை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் நோக்கிலும் இந்த அரிய வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட சுற்றுலாத் தலங்களான கன்னியாகுமரி, முட்டம், சங்குத்துறை, கோவளம் உள்ளிட்ட பல்வேறு கடற்கரை பகுதி புகைப்படங்கள், திருவள்ளுவர் சிலை, தேங்காப்பட்டணம், குளச்சல் துறைமுகம், திற்பரப்பு அருவி, காளிகேசம், உலக்கை அருவி, தாமிரபரணி ஆற்றுப்படுகை மற்றும் மாவட்டத்தின் அரிய வகை மரங்கள், வயல்வெளிகள், மலைப் பகுதிகள், மட்டிபழம், செவ்வாழை உள்ளிட்ட வாழைப்பழ வகைகள், பலா வகைகள் மலைப்பகுதியில் வாழும் அரிய வகை விலங்குகள், பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள், மூலிகைகள், பாரம்பரியக் கட்டிடங்கள் மற்றும் பழங்காலக் கருவிகள் உள்ளிட்டவை பற்றிய தத்ரூபமான புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

தேர்வு செய்யப்படும் 12 புகைப்படங்கள் காலண்டரில் இடம்பெறும். இடம்பெறும் ஒவ்வொரு புகைப்படத்தின் கீழும், அதை எடுத்த புகைப்படக் கலைஞரின் பெயர் மற்றும் விவரங்கள் (குறிப்பு) முறையாக அச்சிடப்பட்டு கௌரவிக்கப்படுவர். தேர்வு செய்யப்படும் புகைப்படக் கலைஞர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்புப் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படும். ஒரு புகைப்படக் கலைஞர் ஏதேனும் ஒரு சிறந்த புகைப்படத்தை மட்டுமே அனுப்ப வேண்டும். மேலும் புகைப்படக் கலைஞரின் பெயர், முகவரி, அலைபேசி எண் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். புகைப்படங்களை வரும் 10.11.2026 க்குள் kkicollector@gmail.com, prokkdt@gmail.com என்ற அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு உரிய விவரங்களுடன் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

தூத்துக்குடி சங்கரராமேஸ்வரர் கோவிலில் ஐப்பசி திருக்கல்யாணத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்: நவ.3ல் தேரோட்டம்; நவ.5ல் திருக்கல்யாணம்!



தூத்துக்குடியில் அமைந்துள்ள புகழ் பெற்ற அன்னை ஸ்ரீ பாகம்பிரியாள் உடனுறை அருள்மிகு ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் திருக்கோவிலில் ஆண்டுதோறும் ஐப்பசி திருக்கல்யாணத் திருவிழா கொண்டாடுவது வழக்கம். அதேபோல் இந்தாண்டு திருவிழாவின் தொடக்கமாக கொடியேற்றம் நிகழ்ச்சி கோலாகலமாகத் தொடங்கியது. திருவிழாவை முன்னிட்டு அன்னை ஸ்ரீ பாகம்பிரியாள் சன்னதி கொடிமரத்தில் கொடியேற்றம் நடைபெற்றது. பூஜைகளைத் திருக்கோவிலின் பிரதான செல்வம் பட்டர், குமார் பட்டர் மற்றும் சண்முகம் ஆகியோர் சிறப்பாக நடத்தினர். இந்நிகழ்வில் தமிழ்நாடு மீனவர் நலன் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு. ஸ்ரீநாத் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் வரும் நவம்பர் 3ம் தேதி நடைபெறவுள்ளது. அருள்மிகு சங்கரராமேஸ்வரர் பாகம்பிரியாள் திருக்கல்யாண வைபவம் வரும் நவம்பர் 5ம் தேதி கோலாகலமாக நடைபெறவுள்ளது. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருக்கோவில் நிர்வாகத்தினரும் அறங்காவலர்களும் இணைந்து செய்து வருகின்றனர்.

ராகுல் காந்தி தலைமையிலான 'வாக்கைக் காப்போம், நாட்டைக் காப்போம்' பேரணி: கிருஷ்ணகிரி மண்டலத்தில் இருந்து திரளாகப் பங்கேற்க முடிவு – பசவன்ன கவுடா தகவல்

கிருஷ்ணகிரி அக். 26:

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களின் ஒருங்கிணைத்து மண்டல பொறுப்பாளர்களாக கர்நாடகா மாநில காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பசவன்ன கவுடா, மாநில துணை தலைவர் ராமவசந்தன், காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கோபிநாத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அறிமுக கூட்டம் மற்றும் செய்தியாளர் சந்திப்பு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தினைத் தொடர்ந்து பேசிய மண்டல பொறுப்பாளரும் கர்நாடகா சட்டமன்ற உறுப்பினருமான பசவன்ன கவுடா பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தி பல வருடங்களாக வாக்கு திருட்டு குறித்து புகார் கூறி வருகிறார். நாட்டின் பல தொகுதிகளில் பாஜக எதிர்ப்பு வாக்குகளான சுமார் 1 கோடியே 70 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் உத்தரவின் பேரில் நீக்க பட்டுள்ளதின் காரணமாக பாஜகவின்



வெற்றிஎளிதாக்கஆணையர் பாடுபட்டுள்ளார். எனவே அவரை பதவி நீக்கம் செய்ய நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. வருகின்ற நவம்பர் 1ம் தேதி டெல்லி ராம்லீலா மைதானத்தில் வாக்கை காப்போம் நாட்டை காப்போம் என்ற பெயரில் நடைபெறும் பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து பெருந்திரளாக பங்கேற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே நாட்டின் ஜனநாயகத்தை காக்கும் பேரணியில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதாக கூறினார். அப்போது கிருஷ்ணகிரி மாவட்ட காங்கிரஸ் தலைவர்களான எம்.சி.ரகு, ஹரிஸ் பாபு, மாநில பொதுச் செயலாளர் ஏகம்பவாணன், கிழக்கு மாவட்ட துணைத் தலைவர் பி.சி. சேகர், முன்னாள் மாவட்டத் தலைவர்களான கிருஷ்ணமூர்த்தி, நாஞ்சில் ஜேசு, ராஜா குமாரவேல், நாரயணமூர்த்தி, சேலம் ரயில்வே கோட்ட உறுப்பினர்ரகமத்துல்லா, தமிழ்நாடு விவசாய காங்கிரஸ் தலைமை சீனிவாசன் சாமிநாயுடு, நகரத் தலைவர்கள் லலித் ஆண்டனி, சாதீக்கான், டாக்டர் தகி, முபாரக், கோவிந்தசாமி, மனோகன், மாரியப்பன், அப்சல், சித்திக், சக்கரவர்த்தி, சக்திவேல், முனீர், பாண்டுரங்கன், சரவணன், செல்வம், ஜெயவேல், குட்டி, உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்.

ஈரோடு திண்டலில் ஓய்வுபெற்ற சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தினர் திரண்டு கண்டன ஆர்ப்பாட்டம்!



ஈரோடு அக் 27

ஈரோடு மாவட்டத்தில் பொதுசுகாதாரத்துறை மற்றும் மாவட்ட சுகாதாரத்துறை நிர்வாகத்தின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும், தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப்பலன்களை உடனடியாக வழங்க வலியுறுத்தியும் ஈரோடு மாவட்ட அனைத்து ஓய்வுபெற்ற சுகாதார ஆய்வாளர்கள் (Grade1) சங்கம் சார்பில் ஈரோடு திண்டலில் உள்ள மாவட்ட சுகாதார அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவின்படி, கோர்ஸ் முடித்த நாளிலிருந்து சுகாதார ஆய்வாளர்களுக்கான அனைத்து பணப்பலன்களும் வழங்கப்பட வேண்டும். ஆனால், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காமல் பொது சுகாதாரத்துறை நிர்வாகம் தொடர்ந்துகாலம்தாழ்த்தி வருவதாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குற்றம்சாட்டினர். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததை அடுத்து சிலருக்குப் பணப்பலன்கள் வழங்கப் பட்டாலும், இன்னும் 1090 பேருக்கு முறையான பணப்பலன்கள் வழங்கப்படாமல் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் பலருக்குப் பணப்பலன்கள் பெறுவதற்கான உத்தரவுகளை DPII நிர்வாகம் அனுப்பாமல் மிகவும் அலட்சியமாக உள்ளதாகவும், DIIO அலுவலகம் உரிய திருத்தங்களைச் செய்து அனுப்பியும்துறை அதிகாரிகள் காலம் தாழ்த்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல நோய்களால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வரும் ஓய்வுபெற்ற சுகாதார ஆய்வாளர்களின் குடும்பங்களைக் காக்கும் வகையில், சம்மந்தப்பட்ட துறை நிர்வாகமும் அரசும் உடனடியாகத் தலையிட்டு அனைத்துப் பணப்பலன்களையும் வழங்க வேண்டும் என்பதே இப்போராட்டத்தின் முக்கிய கோரிக்கையாகும்.

திக்குறிச்சி மஹா தேவர் கோயில் ஆற்றின் பக்கசுவர் அமைக்க விஷ்வ இந்து பரிஷத் சங்கு ஊதி நூதன போராட்டம்



மார்த்தாண்டம், அக்.27

கன்னியாகுமரிமாவட்டத்தில் மஹா சிவாலய ஓட்டம் நடக்கும் பனிரெண்டு சிவாலயங்களில் இரண்டாவது சிவாலயமான ரிஷப ராசி பரிகார ஸ்தலமான பழமை வாய்ந்த திக்குறிச்சி மகாதேவர் கோயில் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது .இந்த கோயில் காம்பவுண்ட் சுவரோடு அமைந்திருந்த இயற்கை மண் திட்டு திக்குறிச்சிபயணம் பாலபணி நடைபெற்றபோது ஏற்பட்ட நீரோட்ட மாற்றத்தாலும் ஆற்றில் ஆண்டில் இருமுறை ஏற்படும் வெள்ளப்பெருக்கால் மண்திட்டு வெள்ளத்தில்அடித்துசென்றது. ஆகவே பக்தர்கள் அந்த பகுதியில் 500 மேற்பட்ட டெம்போ கற்களை கொட்டி பாதுகாப்புநடவடிக்கைஏற்படுத்தினர். ஆனால் அந்த கற்களையும் வெள்ள பெருக்கு அடித்து சென்றதால் கோயில் காம்பவுண்டு சுவர் இடிந்து விழும் அபாயம் ஏற்பட்டது. இதையடுத்து பொது மகக்ள் கோரிக்கையின் பேரில் கடந்த திமுக ஆட்சியில் ஐந்து ஆண்டுகளுக்கு முன் ரூ. 84 லட்சம் பொது பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்து பணிகள் துவங்க மண் இறக்கப்பட்டு கோயில் படித்துறை மூடிய நிலையில் உள்ளது .

இந்த பணிகளை துவங்க கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்து அமைப்புகள் பல போராட்டங்கள் நடத்தியும் கண்டு கொள்ளாமல் இருக்கும் பொதுபணித்துறை, இந்து அறநிலையத்துறை, கனிமவளத்துறை, மாவட்டநிர்வாகம், தமிழக அரசு செவிசாய்க்க வலியுறுத்தி சங்கு ஊதி நூதன முறையில் போராட்டம் நேற்று நடந்தது. விஷ்வ ஹிந்து பரிஷத் நிர்வாகிகள் கோயில் முன் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். உடனே நடவடிக்கை எடுக்காவிட்டால் மிக பெரிய அளவிலான போராட்டம் நடத்த போவதாக அறிவித்துள்ளனர்

மேலும் மண் கொட்டிய இடத்தில் வாழைமரம் நட்டும் எதிர்ப்பை தெரிவித்தனர். விஷ்வ ஹிந்து பரிஷத் மாவட்ட துணை தலைவர் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் இந்து முன்னணி மூத்த தலைவர் குழிச்சல் செல்லன், விஷ்வ ஹிந்து பரிஷத் நிர்வாகிகள் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

குமரி கலெக்டர் தலைமையில் ஊழல் தடுப்பு உறுதிமொழி



நாகர்கோவில், அக்.27 கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில் ஊழல் தடுப்பு உறுதிமொழியினை அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர். நமது நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஊழல் ஒரு முக்கிய தடையாக உள்ளதாக நான் நம்புகிறேன். அரசு, குடிமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை ஊழலை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என நான் நம்புகிறேன். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் உயர்ந்த நாக்குடன் விழிப்புணர்வு, நேர்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றுடன் ஊழலை ஒழிப்பதில் உறுதுணையாக விளங்க வேண்டும் என்பதை நான் நன்கு அறிவேன். எனவே, நான் அனைத்து செயல்களிலும் நேர்மையையும் பின்பற்றுவேன் என்றும்,இலஞ்சம்வாங்கவோ அல்லது கொடுக்கவோ மாட்டேன் என்றும், அனைத்து செயல்களையும் நேர்மை மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்துவேன் என்றும், பொதுமக்களின் நலனுக்காகப் பணியாற்றுவேன் என்றும், தனிப்பட்ட நடத்தையில் நேர்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னுதாரணமாக செயல்படுவேன் என்றும், ஊழல் தொடர்பான நிகழ்வினை உரிய அதிகார அமைப்பிற்குத் தெரியப்படுத்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன். என அனைத்து துறை அரசு அலுவலர்களும் உறுதி மொழி ஏற்றுக்கொண்டார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வேலுமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) பத்மபிரியா, உசூர் மேலாளர் முருகன், அனைத்துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன்ராஜா அவர்கள் இன்று தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்மாப்பிள்ளையூரணிபஞ்சாயத்துஉள்பட்டதிரேஸ்நகர் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.10.93 இலட்சம் மதிப்பி கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி கட்டடத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நா.சரவணன் அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டார்.

குமரியில் தொடர் மழை: மஞ்சாலுமூட்டில் மண்சரிவால் பாறை உருண்டு விழுந்து வீடு சேதம்

கிராமங்கள் இருளில் மூழ்கின



மார்த்தாண்டம், அக். 27

கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் மாவட்ட முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதில் மழையோரபகுதிகளில் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையினால் நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இதற்கிடையே அருமனை சுற்றுவட்டாரபகுதிகளில் பெய்யும் தொடர் மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

முழுக்கோடு ஊராட்சிக்குட்பட்ட உத்தரங்கோடு பகுதியில் இரவு பெய்த கனமழை காரணமாக கடையாலுமூடு குழித்துறை சாலையில் நேற்று முன்தினம் இரவு சுமார் 9 மணி அளவில் அங்கு நின்ற ராட்சத புளியமரம் ஒன்று வேரோடு சாய்ந்து அருகில் இருந்த மின் கம்பத்தில் விழுந்தது.

இதில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு 11 கிராமங்கள் இருளில் மூழ்கின.

இதனால் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தொடர்ந்து கடையலுமூடு மின்வாரிய அலுவலகம் மற்றும் குலசேகரதீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு தீயணைப்பு, மின்வாரிய ஊழியர்கள் கொட்டும் மழையை பொருட்படுத்தாது சீரமைப்பு பணிகளை செய்தனர்.

இது போன்று மஞ்சாலுமூடு பகுதியில் ஆக்னஸ் என்பவர் அரசு வழங்கிய வீட்டில் தனியாக வசித்து வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு கன மழை காரணமாக வீட்டின் பின்பகுதியில் உள்ள மண் சரிந்து விழுந்து, பாறை உருண்டு வீட்டு மேல் விழுந்தது. இதில் வீட்டின் கழிவறை, சமையலறை முற்றிலும் சேதம் அடைந்தது. ஆனால் ஆக்னஸ் உடல் நலம் இல்லாததால் அப்போது வீட்டில் இல்லை. உறவினர் வீட்டில் தங்கி இருந்ததால் அவர் உயிர் பிழைத்தார். இதை அடுத்து அருமனை போலீசார் மற்றும் குழித்துறை தீயணைப்பு குழு வீரர்கள் நேற்று காலையில் சென்று சீரமைப்பு பணியில் ஈடுபட்டனர்.

வாணியம்பாடி அருகே இருசக்கர வாகனம் மீது பேருந்து மோதி விபத்து

18 வயது வாலிபர் சம்பவ இடத்திலேயே பலி!



வாணியம்பாடி,அக்.26 திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த வளையாம்பட்டு பகுதியில், சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள சர்வீஸ் சாலையில், நகராட்சி குப்பைக் கிடங்கிற்கு எதிரே வாணியம்பாடி கோணாமேடு அம்பேத்கர் நகர் பகுதியைச் சேர்ந்த தீபன் குமார் (18), இருசக்கர வாகனத்தில் வாணியம்பாடி நோக்கிச் சென்று கொண்டிருந்தார்

அப்போது, ஆம்பூரில் இருந்து வாணியம்பாடி நோக்கி வந்த தனியார் பேருந்து, தீபன் குமாரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. இதில் நிலைதடுமாறி கீழே விழுந்த தீபன் குமார், பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவல் அறிந்த சம்பவ இடத்திற்கு வாணியம்பாடி கிராமிய போலீசார், விரைந்து சென்று உயிரிழந்த தீபன் குமாரின் உடலைக் கைப்பற்றி, பிரேதப் பரிசோதனைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் தனியார் பேருந்தைப் பறிமுதல் செய்த போலீசார், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை.

அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் தேவர் ஜெயந்தி விழா



திருப்பூர் அக், 27 அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மற்றும் மருது சேனை இணைந்து நடத்திய தேவர் ஜெயந்தி விழா! மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆசாத் ஹிந்த் சர்க்கார் அமைத்த நாளை போற்றும் விதமாக திருப்பூர் கொடிக்கம்பம் பஸ் ஸ்டாப் அருகே நடைபெற்றது.

இதில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தேசதந்தை நேதாஜி. பசும்பொன் தேவர் திருமகனார்.மருது சகோதரர்கள் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு பின்பு பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது மேலும் எஸ்எஸ்எஸ் பவுண்டேஷன் சார்பில் இலவச ஆம்புலன்ஸ் வழங்குவதற்கு முன்னோட்டமாக அதன் புகைப்படம் திறப்பு விழாவும் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாநில குழு உறுப்பினர் மகாலிங்கம் தலைமை தாங்கினார் திருப்பூர் மாவட்ட தலைவர் மாநில குழு உறுப்பினர் ராமர் & மாவட்ட அமைப்புச் செயலாளர் அன்பு ரமேஷ் தேவர். மாநில குழு உறுப்பினர் லட்சுமணன். மாவட்டத் துணைத் தலைவர் கறிக்கடை ரவி. மாவட்ட நிர்வாகி வேலுமணி. உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். இதில் பாரதிய ஜனதா கட்சி வடக்கு மாவட்ட தலைவர்சீனிவாசன். முக்குலத்தோர் தேசிய கழக தலைவர் எஸ் பி ராஜா தேவர். பசும்பொன் பக்தர்கள் பேரவையின் நிறுவன தலைவர் ராயல் லட்சுமணன். எஸ்.எஸ்.எஸ். பவுண்டேஷன் நிறுவனர் தமிழக வெற்றிக்கழக நிர்வாகி சுரேஷ்.

திமுக 18 வது வார்டு கவுன்சிலர் தாமோதரன். பிஜேபி மண்டல தலைவர் முரளி மற்றும் வெற்றி ரஞ்சித் சந்திரன், ரஞ்சித் குமார் வீரச்சந்திரன் சுரேந்தர் வீரக்குமார் லட்சுமணன் எல்பி மணி ஜெயராம் பூவரசன் அஜித் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர் .

20 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருக்கும் இடத்திற்கு இலவச வீட்டுமனை பட்டா கோரி ஆட்சியரிடம் மனு!



கிருஷ்ணகிரி: ஓசூர் அருகே கொத்தூர் கிராமத்தில் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்தில் 20 ஆண்டுகளுக்கும்மேலாக குடியிருந்து வரும் 50க்கும் மேற்பட்ட குடும்பத்தினர், தாங்கள் வசிக்கும் இடத்திற்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், மூக்கண்டப்பள்ளி அருகே உள்ள கொத்தூர் கிராமத்தில் 50க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் குடிசைகள் அமைத்து வசித்து வருகின்றனர். இவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருவதுடன்,வேறுநிலமோவீடோ இல்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

தாங்கள் வசிக்கும் இடத்திற்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கக் கோரி, பல ஆண்டுகளாக அரசு அதிகாரிகளிடம் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதையடுத்து, ஓசூர் மாநகராட்சி கவுன்சிலர் மஞ்சுநாத் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமாரைச் சந்தித்து கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

இதுகுறித்து கவுன்சிலர் மஞ்சுநாத் கூறுகையில், கொத்தூர் கிராமத்தில் பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் மக்களில் சிலருக்கு மட்டும் இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குடும்பங்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. எனவே, அவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, அவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.



சேலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 26.10.2026 திங்கட்கிழமை அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்.

குமரி அரசு கல்லூரிகளில் உள்கட்டமைப்பு குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்

விஜய் வசந்த் எம்.பி. கோரிக்கை



நாகர்கோவில், அக்.27 கன்னியாகுமரி,தூத்துக்குடி, நெல்லை, தென்காசி ஆகிய 4 மாவட்ட கல்லூரி முதல்வர்கள் , நிர்வாகிகள் மற்றும் மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடல் கூட்டம்நெல்லைமாவட்ட ஆட்சியர் ஆனந்தமோகன் தலைமையில் நடைபெற்றது. உயர் கல்வி துறை அமைச்சர் விஸ்வநாதன் பங்கேற்றஇந்தகூட்டத்தில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த் கலந்து கொண்டு பேசியதாவது :

கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் பல அரசு கல்லூரிகளில் மாணவமாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அடிப்படைத் தேவையான காம்பவுண்ட் சுவர்கள் கூட இல்லாத அவல நிலை நீண்ட காலமாக நீடித்து வருகிறது. இது உடனடியாக சரிசெய்யப்பட வேண்டும்.

அதேபோல், பெரும்பாலான கல்லூரிகளில் போதிய வகுப்பறைகள், சுகாதாரமான கழிப்பறை வசதிகள், நவீன உபகரணங்களுடன்கூடிய ஆய்வகங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் போன்ற அடிப்படை வசதிகளில் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. இவற்றை உடனடியாக மேம்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். கல்லூரிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். கல்வி தடையின்றி கிடைக்க நிரந்தரப் பேராசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும். மேலும், தற்போது பணியாற்றி வரும் தற்காலிகப் பணியாளர்களுக்கு உரிய ஊதியம் காலதாமதமின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மைதானங்கள் பல இடங்களில் பராமரிப்பின்றி பாழடைந்து கிடப்பதால், விளையாட்டு மைதானங்களைப் பராமரிக்க பிரத்யேகக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். கிராமப்புறங்களில் இருந்து கல்லூரிகளுக்கு வந்து செல்லும் மாணவமாணவிகளுக்குப் போதிய பேருந்து வசதிகள் இல்லை. இதனால் மாணவர்கள் அச்சத்தோடும், பெரும் சிரமத்தோடும் கல்லூரிக்கு வந்து செல்கின்றனர். எனவே, மாணவர்களின் நலன் கருதி உரிய கூடுதல் போக்குவரத்து வசதிகளை உடனடியாக செய்து தர வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்களுக்கு நிகராக அரசு கல்லூரிகளின் கட்டமைப்பை மேம்படுத்தினால் மட்டுமே, அரசு கல்லூரிகளில் பயிலும் ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிறந்த கல்வியைப் பெற்று எதிர் காலத்தில் உயர்ந்த நிலையை அடைய முடியும். எனவே, மாவட்ட அளவில் ஒரு சிறப்புக் குழுவை அமைத்து, அனைத்து அரசு கல்லூரிகளிலும் உள்ள தேவைகளை விரிவாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். என பேசினார்.

செந்தில் பப்ளிக் பள்ளியில் "குளோபல் கேட்வே" பல்கலைக்கழகக் கல்வி கண்காட்சி



கிருஷ்ணகிரி,அக்: 27 கிருஷ்ணகிரியில் முதன் முறையாக, செந்தில் பப்ளிக் பள்ளியில் உலகளாவிய கல்விக் கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியில் கிருஷ்ணகிரி நகரில் உள்ள செந்தில் பப்ளிக் பள்ளி மற்றும் செந்தில் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஒன்பதாம் வகுப்பு பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர். இக்கண்காட்சியில் 25 பல்கலைக்கழகங்களைசேர்ந்தபிரதிநிதிகள் கலந்து கொண்டனர். உயர் கல்வியில் உள்ள பல்வேறு வாய்ப்புகளை ஆராயவும், வெவ்வேறு கல்விதிட்டங்களைபற்றி அறிந்து கொள்ளவும், பல்கலைக்கழகச் சேர்க்கை நடைமுறைகள் மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகள் குறித்த தெளிவைப் பெறவும் மாணவர்களுக்கு இக்கண்காட்சி சிறந்த தளமாக அமைந்தது. சென்னை வேலூர் தொழில்நுட்ப நிறுவனம் வி.ஐ.டி., மெட்டா எஃப்.ஐ.எஸ் எர்ணாகுளம், மணிப்பால் பல்கலைக்கழகம் கர்நாடகா, அப்பல்லோ பல்கலைக்கழகம் ஆந்திரப் பிரதேசம், அமிர்தா பல்கலைக்கழகம் கோயம்புத்தூர். உள்ளிட்ட பல புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் இந்நிகழ்வில் பங்கேற்றன. பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் மாணவர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, தங்களது கல்வி நிறுவனங்கள், கல்வித் திட்டங்கள் மற்றும் சேர்க்கை வாய்ப்புகள் குறித்து விரிவான தகவல்களை பகிர்ந்து கொண்டனர். மேலும் மாணவர்கள் தங்களது எதிர்கால கல்வி பாதையை தெளிவாக தேர்ந்தெடுக்க தேவையான வழிகாட்டு தல்களையும் வழங்கினர். இக்கண்காட்சியில் பங்கேற்ற மாணவர்கள் உயர்கல்வி குறித்த விரிவான புரிதலையும், தங்களுக்கான கல்வி வாய்ப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் கூடுதல் தெளிவையும் பெற்றனர். செந்தில் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தினரும், ஆசிரியர்களும் கண்காட்சியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களையும், அவர்களது ஆர்வமிக்க பங்கேற்பைப் பெரிதும் பாராட்டினர். இந்நிகழ்வில் செந்தில் கல்வி நிறுவனங்களின் தலைவர் செந்தில் கந்தசாமி, துணை தலைவர் மணி மேகலை கந்தசாமி, செயலாளர் தனசேகர், தாளாளர் தீப்தி தனசேகர், நிர்வாக அலுவலர் கார்த்திகேயன், சி.இ.ஓ மாதையன், முதன்மை முதல்வர் ஸ்ரீனிவாசன், பப்ளிக் பள்ளி, முதல்வர் வேங்கடஅழகிரி, மெட்ரிக் பள்ளி முதல்வர் வேதகுமார், அனைத்து பிரிவுகளின் கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களின் முயற்சிகளுக்கு வாழ்த்துகளையும் ஆசிகளையும் வழங்கினர்.

கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

40 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்



நாகர்கோவில், அக்.27 கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித் தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 326 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. இந்த மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து கலெக்டர் 12 திருநங்கைகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, 26 பயனாளிகளுக்கு கணவர் இறந்து வறுமையில் இருப்பவர்களுக்கு வழங்கப்படும் நலந்தோர் உதவித்தொகைக்கான ஆணைகள், 1 பயனாளிக்கு நகல் குடும்ப அட்டையினை வழங்கினார்கள்.

மேலும் கடந்த 21.10.2026 அன்று திருவட்டாரில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் உங்கள் ஊரில் உங்களுடன் திட்ட முகாமில் சக்கர நாற்காலி கோரிய ஓமனா என்பவருக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. மேலும் மாற்றுத்திறன் பயனாளிகளின் கோரிக்கை மனுக்களும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தமு.வேலுமணி, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் சரவணன், துறை அலுவலர்கள், பொது மக்கள் உட்பட பலர்கலந்து கொண்டார்கள்.

களியக்காவிளையில் வழக்கில் ஒரு ஆண்டாக தலைமறைவாக இருந்தவர் கைது



களியக்காவிளை, அக்.27

குமரி மாவட்டத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு தலைமறைவாக இருப்பவர்களையும், நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நீண்ட காலமாக தலைமறைவாக இருந்து வருபவர்களையும் கண்டறிந்து கைது செய்ய மாவட்ட காவல்துறையினர் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக களியக்காவிளை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோழிவிளை பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் என்பவரின் மகன் ஸ்ரீதரன் என்பவர், அடிதடி வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், கடந்த ஒரு ஆண்டாக தலைமறைவாக இருந்து வந்தார்.

இந்த நிலையில் ஒரு ஆண்டு காலமாக தலைமறைவாக இருந்து வந்த ஸ்ரீதரனைக் கண்டறிந்து உடனடியாக கைது செய்யுமாறு கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அன்ஷுல் நாகர் உத்தரவிட்டார்.

இதன் பேரில் களியக்காவிளை காவல் நிலைய காவல் ஆய்வாளர் பரமேஸ்வரன் தலைமையில் தனிப்படை போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் அடிதடி வழக்கில் தலைமறைவாக இருந்த ஸ்ரீதரன் என்பவரை தனிப்படை போலீசார் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

STAR 3.0 திட்டத்தை ரத்து செய்யக் கோரி ஈரோட்டில் பத்திரம் நகல் எழுதுவோர் கண்டன ஆர்ப்பாட்டம்



ஈரோடு அக் 27

தமிழக பத்திரப்பதிவுத் துறையில் அமல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள STAR 3.0 திட்டத்திற்கான இடைண்டரை உடனடியாக ரத்து செய்யக் கோரி, தமிழ்நாடு பத்திரம் நகல் எழுதுவோர் சங்கம் சார்பில் ஈரோடு பதிவுத்துறை அலுவலகம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதில், பத்திரப்பதிவு நடைமுறையை முழுமையாகக் காகிதமில்லா முறையிலும், பொதுமக்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வரத் தேவையில்லாத இணையவழி நடைமுறையாகவும்மாற்றும்திட்டத்தைக் கைவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால், பல தலைமுறைகளாக பத்திரம் நகல் எழுதும் தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்களின் ஆவணப் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், பத்திரம் நகல் எழுதுவோரின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும் வகையில் தமிழக அரசு STAR 3.0 திட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர். கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், அடுத்தகட்டமாகத் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் எனவும் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு



ஒவ்வொரு ஆண்டும் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. அந்தவகையில் இந்தவருடம் 26.10.2026 முதல் 1.11.2026 வரை ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்க தமிழக அரசு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழியை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத்வாசிக்கஅனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், உதவி ஆட்சியர் நந்தனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஷாலினி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஜானகி, திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) சுகந்தி பரிமளம், உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அருளாளன், மாவட்ட வழங்க அலுவலர் மோகனசுந்தரம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலஅலுவலர்சின்னசாமி, மாவட்ட சமூக நீதி துறை அலுவலர் கணேசன், உட்பட அனைத்து அலுவலக அரசு அலுவலர்களும் மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

குமரியில் தொடர் மழை:குழித்துறை சப்பாத்து பாலத்தில் 7ம் நாளாக போக்குவரத்து தடை

மார்த்தாண்டம், அக்.27

கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள சூழ்நிலையில் பருவமழை துவங்கிய நாள் முதல் பரவலான மழை பெய்து வருகிறது. நேற்று அர்னாப் புயல் உருவாக்கியதன் தாக்கம் காரணமாக இந்திய வானிலை மையம் கன மழை அறிவித்திருந்த நிலையில், காலை முதல் மதியம் வரை மேக மூட்டத்துடன்சில இடங்களில் சாரல் மழை பெய்தது. மதியத்திற்கு பிறகு அதிகாலை வரை விட்டு விட்டு மிதமான மழை பெய்து வருகிறது.

மேற்கு தொடர்ச்சி மலையோர பகுதிகளான கோதையாறு, ஆறு காணி ,பேச்சிப்பாறை ,குலசேகரம் பகுதிகளில் விட்டு விட்டு கன மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் முக்கிய ஆறுகளான கோதையாறு , பரியாறு, தாமிரபரணி ஆறு வெள்ள



பெருக்கு ஏற்பட்டு கரை புரண்டு ஓடுகிறது. ஆறுகளில்குளிக்கதடைவிதித்து மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்திஉள்ளது. குழித்துறை தடுப்பணை சப்பாத்து பாலம் ஏழு நாட்களுக்கு மேலாக பாலம் மூழ்கி தண்ணீர் ஆக்ரோஷமாக செல்வதால் இருபுறங்களிலும் தடுப்பு வேலிகள் அமைத்து போக்கு வரத்து தடை செய்யப்பட்டுள்ளது.தடையை மீறி பாதசாரிகள் நடந்து வராமல் பொதுப்பணித்துறை நகராட்சி ஊழியர்கள் கண்காணித்து வருகின்றனர். குமரியில் நேற்று காலை வரை பெய்த மழை விபரம் :நாகர்கோவில் 24 மில்லி மீட்டர், கொட்டாரம் 78.8, நிலப்பாறை 58.6, அடையாமடை 57.2, திற்பரப்பு 54.4, பூதப்பாண்டி 47.8, மயிலாடி 46.4, குளச்சல் 43 ,பெருஞ்சாணி 40.4, பாலமோர் 39.6, சுருளோடு 39.2, பேச்சிப்பாறை 37, கன்னிமார் 36.6, சிவலோகம் 31.2, சிற்றார்,1 29.8, இரணியல் 27, ஆணை கிடங்கு 25.2 மீ மீட்டர்கள் பதிவாகி உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தமாக பரவலாக கடந்த 24 மணி நேரத்தில் 921.4 மில்லிமீட்டர்மழை பதிவாகி உள்ளது.

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது



ராணிப்பேட்டை அக் 27

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., நேற்று (26.10.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்தார். மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த் துறை நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை வேளாண்மைத்துறை,காவல்துறை. ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித்துறை, கூட்டுறவு, மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கிராம பொதுப் பிரச்சனைகள், குடிநீர் வசதி, வேலைவாய்ப்பு வேண்டி மனுக்கள் மற்றும் பொதுநலன் குறித்த 432 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின்உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மனு நிராகரிப்பிற்கான காரணங்களையும் மனுதாரர்களுக்கு வழங்கிட வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சரவணன் மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மத்தூர் அருகே பயங்கர விபத்து இரண்டு பைக்குகள் நேருக்கு நேர் மோதி இருவர் பரிதாப பலி

போலீசார் தீவிர விசாரணை




கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகே உள்ள நாகம்பட்டி சுங்கச்சாவடி (டோல்கேட்) பகுதியில் இரண்டு இருசக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட★ விபத்தில் இருவர்★ சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் இருவர்★ படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிருஷ்ணகிரியிலிருந்து திருவண்ணாமலை நோக்கி ஒரு இருசக்கர வாகனத்தில் இருவர்★ சென்று கொண்டிருந்தனர்.

அதேபோல, திருவண்ணாமலையிலிருந்து கிருஷ்ணகிரி நோக்கி மற்றொரு இருசக்கர வாகனத்தில் இருவர் வந்து★ கொண்டிருந்தனர்.

மத்தூர் அடுத்த நாகம்பட்டி சுங்கசாவடிஅருகே இரு வாகனங்களும் அதிவேகமாக வந்தபோது, எதிர்பாராதவிதமாக நேருக்கு நேராக அதிபயங்கரமா★ மோதிக்கொண்டன. மோதிய வேகத்தில் ஒரு இருசக்கர வாகனம் உடனடியாகத் தீப்பற்றி எரியத் தொடங்கியது.★

இதில்,அந்தவாகனத்தை ஓட்டி வந்த நபர் தீயில் சிக்கி, சம்பவ இடத்திலேயே முற்றிலும் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தார். மற்றொரு வாகனத்தில் வந்த நபர் பலத்த தலைக்காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும், இந்த விபத்தில் படுகாயமடைந்த மற்ற இருவரை அருகில் இருந்தவர்கள் மீட்டு, உடனடியாக மத்தூர் அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.விபத்து நடந்த இடத்தில் 100க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட பட்டன் போன்கள் மற்றும் ஆண்ட்ராய்டு செல்போன்கள் சிதறிக் கிடந்தன. இது அங்கிருந்தவர்களிடையே பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்தவர்கள் மற்றும் படுகாயமடைந்தவர்கள் யார் என்ற விவரம் உடனடியாக தெரியவரவில்லை. இதுகுறித்து தகவலறிந்த மத்தூர் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து உடல்களைக் கைப்பற்றிப் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கே விரைந்து வந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா மற்றும் போக்குவரத்து ஆர் டி ஓ, தடைகள் ஆய்வு மேற்கொண்டனர் இந்த ஆய்வில் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் டியூப்லீக் ஆகி இருப்பதால் இந்த விபத்தில் நடந்திருப்பதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றனர்.மேலும், விபத்துக்குள்ளானவர்கள் யார், இவ்வளவு செல் போன்கள் அவர்களிடம் எப்படி வந்தது என்ற கோணத்தில் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த சாரதி த/பெ ராஜா தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செல்வன் த/பெ கார்த்திகேயன் உயிரிழந்த உள்ளனர்



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழியை மாவட்டஆட்சித்தலைவர்ச.தினேஷ்குமார்தலைமையில், அனைத்துஅரசுதுறை அலுவலர்கள் எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் த.மஞ்சுளா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது முருகேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதா ராணி, தனித்துணை ஆட்சியர்.சமூக பாதுகாப்பு திட்டம். அபிநயா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்.நிலம். ஸ்ரீராம், உதவி ஆட்சியர்.பயிற்சி. சாய் சைதன்யா ஜாதவ் , உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கோவை மாநகர் மாவட்டம்,கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கெம்பட்டி காலனி அசோக் நகர் பகுதியில் கனமழை காரணமாக வீடுகள் மற்றும் தெருக்களில் மழைநீர் தேங்கி உள்ளதை அடுத்து மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் மாரி செல்வம்,பகுதி பொறுப்பாளர் என்ஜே முருகேஷ்,வட்ட பொறுப்பாளர்கள் தங்கவேல்,ராஜேஷ் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

சேலம் மாவட்டத்தில் எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் அக்.29ல் நடைபெறுகிறது!

சேலம் அக் 27: சேலம் மாவட்டத்தில் எரிவாயு நுகர்வோர்களுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் 29.10.2026, வியாழக்கிழமை அன்று நடைபெற உள்ளது. இதுகுறித்து, மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், சேலம் மாவட்டத்தில் எரிவாயு உருளைகள் பதிவு செய்வதிலும், விநியோகம் செய்வதிலும் உள்ள குறைபாடுகள் மற்றும் புகார்கள் தொடர்பாக எரிவாயு பெறும் வாடிக்கையாளர்கள், அனைத்து எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் எரிவாயு முகவர்கள் ஆகியோர்களைக் கொண்டு எரிவாயு நுகர்வோர்களுக்கான அக்டோபர் 2026 மாதத்திற்கான குறைதீர்க்கும் கூட்டம் 29.10.2026, வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அறை எண்.115, மகிழம் கூட்டரங்கில் நடைபெற உள்ளது. சேலம் மாவட்டத்தில் உள்ள எரிவாயு நுகர்வோர்கள் இக்குறைதீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் குறைகளை மனுக்களாக அளித்து தீர்வு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி முத்தையாபுரத்தில் சாலை விபத்துகளைத் தடுக்கக் கோரி ஆட்சியரிடம் மனு

ஒரே மாதத்தில் 14 பேர் உயிரிழந்ததாக மக்கள் குற்றச்சாட்டு!



தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் அதிகரித்து வரும் சாலை விபத்துகளைத் தடுத்து, பொதுமக்களின் உயிரைப் பாதுகாக்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை மனு அளித்தனர்:

தூத்துக்குடி மாநகராட்சி முத்தையாபுரம் பகுதியில் அதிகரித்து வரும் சாலை விபத்துகளைத் தடுத்து, பொதுமக்களின் உயிரைப் பாதுகாக்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை மனு அளித்தனர். தூத்துக்குடிமுத்தையாபுரம் பகுதியில் பள்ளிகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் நிறைந்துள்ள நிலையில், உப்பாத்து ஓடை ரவுண்டானா முதல் தோப்புத் தெரு வரையிலானசாலையில் கனரக லாரிகள் விதிமுறையின் றி நிறுத்தப்பட்டு வருகின்றன. இதனால் ஏற்படும் விபத்துகளால் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 14 பேர் உயிரிழந்துள்ள தாகப் பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். ஆபத்தான சாலைத் தடுப்பு இடைவெளிகளை அடைத்து, குறிப்பிட்ட இடத்தில்மட்டும் வாகனத் திருப்புமுனை அமைக்க வேண்டும். உப்பாத்து ஓடை பெட்ரோல் பங்க் அருகே உள்ள மட்டுக்கல்லை உடனடியாக அகற்ற வேண்டும்.

மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் உள்ள கண்டெய்னர் லாரி செட்டுகளை வெளிப்பகுதிக்கு மாற்ற வேண்டும். சாலையின் இருபுறமும் குவிந்துள்ள மணலை அவ்வப்போது அகற்ற வேண்டும்.

பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி முத்தையாபுரம் ஊர் பொதுமக்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

தொலைந்து விட்டது

எமது கட்சிகாரரான, திண்டுக்கல் மாவட்டம், 624308,வேம்பார்பட்டி கிராமம் , கோபால்பட்டி , கதவு எண் 7/147ல்வசிக்கும்கிருஷ்ணமூர்த்திஅவர்களின்மகன்வினோத், எனது தாயார் ராஜேஸ்வரி அவர்கள் பெயரில் கடந்த 03/05/1995 ம் தேதி கிடைக்க பெற்ற சொத்தை திண்டுக்கல், சாணார்பாட்டி சார்பாதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 397/1995 ஆக பதிவு செய்து, ஷை சொத்தை நாங்கள் எங்கள் கைவசம் வைத்து அனுபவித்து வந்தநிலையில் அனைத்தையும் நகல் எடுப்பதற்காக கடந்த 02/01/2026 ம் தேதி அன்று காலை சுமார் 10:30 மணியளவில் எனது விலாசத்துக்கு பக்கம் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்துவிட்டு செல்லும் வழியில் எங்கயோ மேற்கண்ட ஆவணம் தொலைந்து விட்டது. எங்கு தேடியும் இதுவரை கிடைக்க வில்லை. காணாமல் போன ஆவணம் (ஆவண எண் : 397/1995)கிடைக்க பெற்றால் என்னிடமோ அல்லது எனது கட்சிக்காரரிடம் ஒப்படைக்க வேண்டுமாயின் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது

D. KARUPPIAH, B.SC., B.L.,
ADVOCATE& NOTARY
33/24, KALIAMMAN KOVIL
STREET, Y.M.R. PATTY, DINDIGUL DIST.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.